## 103. ஆத்துமாவே நீ கர்த்தரை

**பல்லவி**

ஆத்துமாவே நீ கர்த்தரை ஸ்தோத்திரி
முழு உள்ளமே அவர் நாமத்தை ஸ்தோத்தரி

**அனுபல்லவி**

*அவர் செய்த சகல உபகாரங்கள்*
*என்றைக்கும் மறவாதே – 2*

**சரணங்கள்**

1. அவர் உன் அக்கிரமங்களெல்லாம்
மன்னித்து விடுவித்தார்
உன் நோய்களை எல்லாம் குணமாக்கினார்
அவரே உன் பரிகாரி
- ஆத்துமாவே நுி

2. உந்தன் ஜீவன் அழிவுக்கு
விலக்கி மீட்டு விட்டார்
கிருபையினால் இரக்கத்தினால்
முடிசூட்டி மகிழ்கின்றார் - உன்னை
- ஆத்துமாவே நீ

3. நன்மையினால் உன் வாயை
திருப்தியாக்குகிறார்
கழுகுக்கு சமமான உன் வயதை
வாலிப வயதாக மாற்றுகிறார்
- ஆத்துமாவே நீ